admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி


NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

| Vol: 02 | Issue: 352 | 4 Pages | 18.7.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| மலர்: 02 | இதழ்: 352 | 4 பக்கங்கள் | 18.7.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |









**அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்**
**வேண்டிய வெல்லாம் ஒருங்கு**

**விளக்கம்:** ஐம்பொறிகளுக்கும் உரிய ஐந்து புலன்களின் ஆசையையும் வெல்லுதல் வேண்டும், அவற்றிற்கு வேண்டிய பொருள்களை எல்லாம் ஒரு சேர விட வேண்டும்.

# மயிலாடுதுறை: ரூ.432 கோடி மதிப்பீட்டிலான 47 முடிவுற்ற பணிகளை முதல்வர் திறந்து வைத்தார்

சென்னை, ஜூலை 18

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ.48 கோடியே 17 லட்சம் செலவில் 47 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.113 கோடியே 51 லட்சம் மதிப்பீட்டிலான 12 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ. 271 கோடியே 24 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு வழங்கினார்.




மயிலாடுதுறை மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்

மயிலாடுதுறை மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், தரங்கம்பாடி பேரூராட்சியில் ரூ. 1 கோடியே 21 லட்சம் மதிப்பீட்டில் அறிவுசார் மையம், குத்தாலம் பேரூராட்சியில் ரூ. 2 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் விலங்குகள் கருத்தடை அறுவை சிகிச்சை மையம் மற்றும் தார்சாலைப் பணிகள், வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சியில் ரூ. 1 கோடியே 9 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலைப் பணிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், பொறையாறில் உள்ள அரசு மருத்துவமனையில் ரூ. 3 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம், சித்தர்க்காட்டில் ரூ. 50 லட்சம் மதிப்பீட்டில் அரசு நோய் தடுப்பு மருந்து கிடங்கு;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், மயிலாடுதுறை வட்டம், சீனிவாசபுரத்தில் ரூ. 85 லட்சம் மதிப்பீட்டில் மண் பரிசோதனை நிலையம்; என மொத்தம், ரூ. 113 கோடியே 51 லட்சம் மதிப்பீட்டில் 12 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், 3000 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள், 117 பயனாளிகளுக்கு திருமண உதவித் தொகை மற்றும் இயற்கைமரணம்உதவித்தொகை; ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 7000 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் வீடுகள், வீடுகளை சீரமைக்க நிதியுதவி, முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் நிதி உதவிகள்; மகளிர் திட்டத்தின் சார்பில், 12,086 பயனாளிகளுக்கு சுயஉதவிக் குழு வங்கி நேரடி கடன், நலிவு நிலை குறைப்பு நிதி, சமுதாய முதலீட்டு நிதி, சுழற்சி முறை கடன்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், 25,669 பயனாளிகளுக்கு குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம், இளைஞர்களைதொழில்முனைவோராக்கும் திட்டம், வேளாண்மை இயந்திரமாக்கல் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் உதவிகள்; தாட்கோ சார்பில், 124 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தில் நான்கு சக்கர வாகனங்கள், கறவை மாடுகள் வாங்கிட மானியத்துடன் கடனுதவி, நன்னிலம்மகளிர்நிலஉடமைதிட்டத்தில் இரண்டு ஏக்கர் நிலம், தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள்;

மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில், 2500 பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்தினைஉயர்த்திடும்பொருட்டு நுண்கடன் வழங்குதல், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்சீர்மரபினர்நலத்துறை சார்பில், 202 பயனாளிகளுக்கு சலவைப் பெட்டி, தையல் இயந்திரங்கள், முஸ்லீம் மற்றும் கிறித்துவ மகளிருக்கு நலத்திட்ட உதவிகள், சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள்; மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், 1000 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள்; கூட்டுறவுத் துறை சார்பில், 1,242 பயனாளிகளுக்கு பயிர்க்கடன், கால்நடை பராமரிப்பு, தாட்கோ கடன், மாற்றுத்திறனாளி கடன் உதவி, சிறுபான்மையினர் கடன் உதவி, டாம்கோ கடன், கரும்பு கடன்;

என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் ரூ. 271 கோடியே 24லட்சம்மதிப்பிலானநலத்திட்ட உதவிகளை 54,461 பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் வழங்கினார்.

## பெங்களூரு கூட்ட நெரிசல்: ஆர்சிபி அணியே முழு பொறுப்பு கர்நாடக அரசு அறிக்கை தாக்கல்




பெங்களூரு, ஜூலை 18

நடந்து முடிந்த 2025 ஐபிஎல் போட்டியில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையைக் கைப்பற்றியது. சாம்பியன் பட்டத்தை வென்றதையடுத்து, ஆர்சிபி அணி வீரர்கள் ஐபிஎல் கோப்பையுடன் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் கடந்த ஜூன் 4 ஆம் பேரணி நடத்தினர். மாநில அரசு, கர்நாடக கிரிக்கெட் சங்கம் சார்பில் பாராட்டு விழாவும் நடைபெற்றது. இதில் பங்கேற்கச் சென்ற பார்வையாளர்கள் 11 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தனர். 33 போ் காயமடைந்தனர்.

இதுதொடர்பாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி, கர்நாடக மாநில கிரிக்கெட் சங்கம், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது பெங்களூரு காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர். கர்நாடக ஐகோர்ட்டும் தாமாக முன்வந்து இதுதொடர்பான வழக்கை விசாரித்து வருகிறது. கர்நாடக கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக நீதிபதி தலைமையில் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையம் அண்மையில் அறிக்கையும் தாக்கல் செய்தது.

இந்த நிலையில், விசாரணையை அறிக்கையை கோர்ட்டில் கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ளது.அதில் கூறப்பட்டுள்ளதாவது: 11 பேர் உயிரிழப்புக்கு காரணமான கூட்ட நெரிசலுக்கு ஆர்.சி.பி. அணி நிர்வாகம்தான் காரணம். காவல்துறையிடம் எந்த அனுமதியும் பெறாமல்வெற்றிகொண்டாட்டத்திற்கு ஆர்.சி.பி.நிர்வாகம்அழைப்பு விடுத்திருந்தது.வெற்றிகொண்டாட்டம்நடத்துவதாககாவல்துறைக்கு தகவல் மட்டுமே தெரிவிக்கப்பட்டது. ஜூன் 4ம் தேதி காலை 8:55 மணிக்கு வெற்றியை பெங்களூரு மக்களுடன் கொண்டாட விரும்புவதாக விராட் கோலி பதிவிட்டு இருந்தார். கூட்ட நெரிசலுக்கு முழுக்க முழுக்க ஆர்.சி.பி. நிர்வாகமே காரணம்" என்று கூறப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## கூலித்தொழிலாளிக்கு அடித்த யோகம்: ரூ.6 க்கு வாங்கிய லாட்டரியில் ரூ.1 கோடி பரிசு



அமிர்தசரஸ், ஜூலை 18

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மோகா மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஜஸ்மயில் சிங். இவர் அங்குள்ள செங்கல் சூளையில் பணியாற்றி வருகிறார். கூலித் தொழிலாளியான இவர், பெரோஷ்பூருக்குச் சென்றபோது, ரூ.6 க்கு லாட்டரி டிக்கெட் வாங்கியிருக்கிறார். மறுநாள், லாட்டரி டிக்கெட்டை விற்பனை செய்தவரிடமிருந்து ஜஸ்மயில் சிங்குக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

அதில், "ரூ.1 கோடி உங்களுக்கு பரிசாக அடித்துள்ளது" என்று கூறியுள்ளார். இதைக் கேட்டு ஜஸ்மயில் சிங் இன்ப அதிர்ச்சியடைந்தார். உடனே, இசை வாத்தியங்களுடன் தனது குடும்பத்தினருடன் ஆட்டமும் பாட்டமும் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட ஜஸ்மயில் சிங், கிலோ கணக்கில் இனிப்புகளை வாங்கி, அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். இது குறித்து ஜஸ்மயில் சிங் கூறுகையில், "இந்தப் பணத்தை வைத்து ரூ.25 லட்சம் கடனை அடைப்பேன். மீதமுள்ள தொகையை எனது குழந்தைகளின் எதிர்காலப் பாதுகாப்புக்காகப் பயன்படுத்துவேன்" என்றார்.

## என்ஜின் கோளாறு; இண்டிகோ விமானம் அவசரமாக தரையிறக்கம்




புதுடெல்லி, ஜூலை 18

டெல்லியில் இருந்து கோவாவிற்கு சென்ற இண்டிகோ விமானத்தில் நடுவானில் தொழில்நுட்ப கோளாறு கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து, விமானம் அவசர அவசரமாக மும்பையில் தரையிறக்கப்பட்டது.

கோவா விமான நிலையத்தில் விமானம் பத்திரமாக நேற்றிரவு 9.53 மணிக்கு தரையிறக்கப்பட்டது. விமானத்தில் இருந்த பணிகள் 191 பேரும் வெளியேற்றப்பட்டு ஓட்டலில் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் மாற்று விமானம் ஏற்பாடு செய்யப்பட்டு பயணிகள்அனைவரும் கோவாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது குறித்து இண்டிகோ விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: டெல்லி விமான நிலையத்தில் இருந்து கோவா நோக்கி புறப்பட்ட விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு கண்டறியப்பட்டது. இதையடுத்து, மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

விமானம் மீண்டும் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கு முன்பு தேவையான சோதனைகள் மேற்கொள்ளப்படும். பயணிகளுக்கு மாற்று விமானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகிறோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.






தினகனி



# வெடிகுண்டு வழக்குகளில் கைது செய்யப்பட்ட 2 முக்கிய குற்றவாளிகள் பற்றி திடுக்கிடும் தகவல்கள்

சென்னை, ஜூலை 18

தமிழகத்தில் நடந்த பல்வேறு குண்டுவெடிப்பு சம்பவங்களில் முக்கிய குற்றவாளிகளாக கருதப்பட்ட அபுபக்கர் சித்திக், முகமது அலி ஆகிய இருவரும் சமீபத்தில் கைது செய்யப்பட்டனர். 30 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த அவர்களை, தமிழ்நாடு பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீசார் ஆந்திராவில் கைது செய்து சென்னை அழைத்து வந்தனர்.

புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர்கள் இருவரையும், பயங்கரவாத தடுப்பு பிரிவு போலீசார், கடந்த 6 நாட்களாக போலீஸ் காவலில் வைத்து விசாரித்தார்கள். நேற்று விசாரணை முடிந்து அவர்கள் இருவரும் மீண்டும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களிடம் ஆந்திர போலீசாரும், மத்திய உளவு பிரிவு போலீசாரும் நடத்திய விசாரணையில் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.





வெடிகுண்டு வழக்குகள் விவரம்:

குற்றவாளிகள் அபுபக்கர் சித்திக், முகமது அலி ஆகியோரை அறிவியல் பூர்வமான தொழில் நுட்ப யுக்திகளை கையாண்டு கைது செய்தோம். தமிழகத்தில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு அபுபக்கர் சித்திக் மூளையாக செயல்பட்டுள்ளார்.

இவர்கள் மீது எழும்பூரில் பழைய போலீஸ் கமிஷனர் அலுவலகம் அருகே குண்டு வைத்த வழக்கு, சிந்தாதிரிப்பேட்டை இந்து முன்னணி அலுவலகத்தில்குண்டுவெடித்த வழக்கு, அத்வானி ரத யாத்திரையின்போது மதுரை திருமங்கலம் அருகேபாலத்தில்குண்டு வைத்த வழக்கு, பா. ஜனதா மாநில மருத்துவ அணிசெயலாளர்வேலூர் அரவிந்த்ரெட்டி கொலை வழக்கு போன்ற பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவர்களை மீண்டும் காவலில் எடுத்து விசாரணை நடத்த உள்ளோம்.

வெடிகுண்டு செய்வதில் அபுபக்கர் சித்திக் கைதேர்ந்த நிபுணர். அவர், வெடிகுண்டுகள் செய்வது பற்றி ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு சென்று சில காலம் தங்கி பயிற்சி பெற்றுள்ளார். அவர் துபாயிலும் 3 ஆண்டுகள் தங்கி நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்துள்ளார்.

சிறையில் இருக்கும் போலீஸ் பக்ருதீன், பன்னா இஸ்மாயில், பிலால் மாலிக் ஆகியோருக்கு அபுபக்கர் சித்திக்தான் குருநாதர் போல செயல்பட்டுள்ளார். இவர்களை மீண்டும் காவலில் எடுத்து விசாரிக்கும்போது மேலும் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகலாம் என்று எதிர் பார்க்கிறோம். இவ்வாறு போலீசார்தெரிவித்தனர்.

# சீர்காழியில் கல்வி வளர்ச்சி நாள் விழா




சீர்காழி ஜூலை 18

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைந்துள்ள ச.மு. இந்து மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பெருந்தலைவர் காமராஜரின் 123 வது பிறந்தநாள்விழாமற்றும் கல்வி வளர்ச்சி நாள் விழாவானது பள்ளியுடன் இணைந்து சீர்காழி ரோட்டரி சங்கம் கொண்டாடியது . இந்நிகழ்வில் பள்ளி மாணவ மாணவிகளுக்குகட்டுரைபோட்டி, ஓவிய போட்டி , பேச்சு போட்டி ஆகிய ஆகியவைகள் பெருந்தலைவர் காமராசரை பற்றி நடத்தப்பட்டது இதில் 30 மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு நற்சான்றிதழ் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியராக பொறுப்பில் இருக்கும் எஸ். முரளிதரன் தலைமை வகித்தார் பள்ளி உதவி தலைமை ஆசிரியர் என். துளசிரங்கன் முன்னிலை வகிக்க, விழாவின் சிறப்பு விருந்தினராக இந்த ஆண்டின் உடைய ரோட்டரி சங்கத் தலைவர் திருவாளி பி. நடராஜன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளித்தார். இந்நிகழ்வில் சங்கப் பொருளாளர் பி. கணேசன், முன்னாள் தலைவர்கள் எஸ். கணேஷ், பி.கண்ணன். ,பி. சுசீந்திரன், பாலமுருகன், ராஜேந்திரன்அடுத்த ஆண்டின் தலைவர் ஏ. சண்முகம், சூரத் வி. கணேசன், ஆயூப் அன்சாரி, விநாயகமூர்த்தி, ஆர். கணேஷ்,, ஆர். கண்ணன், நாசர். பள்ளியின் மூத்த ஆசிரியர் வி.முருக பாண்டியன் உட்பட 50க்கும் மேற்பட்ட பள்ளி ஆசிரியர்களும் , 2000க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாட்டினை பள்ளியின் முதுகலை ஆசிரியர் வி. சந்தோஷ்குமார், பட்டதாரி ஆசிரியர்கள் எம். சத்தியமூர்த்தி, எஸ். கே. திருநாவுக்கரசு ஆகியோர் செய்து இருந்தனர். விழா நிறைவாக பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் என். துளசிரங்கன் நன்றி கூறினார்.

# தூத்துக்குடி போலீசாருக்கு சைபர் கவசம் சிறப்பு வகுப்பு

தூத்துக்குடி ஜூலை 18

இன்றைய காலத்தில் மக்களின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்தும் தகவல் தொழில்நுட்பம் (Information Technology) சார்ந்த நடவடிக்கைகளாகியுள்ளது. இந்த நிலையில், அறியாமையின் காரணமாக அன்றாடம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பலதரப்பட்ட பாதிப்புகளை சந்திக்கும் போது மக்களின் புகார்கள் குறித்து நடவடிக்கை மேற்கொண்டு வரும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள், தங்களது தனிப்பட்ட பாதுகாப்பு மற்றும் தங்களது பணியின் காரணமாக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த போதிய விழிப்புணர்வுடனும் தெளிவுடனும் இருக்க வேண்டும். இதனை கருத்தில் கொண்டு, தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் அறிவுரையின்படி, தூத்துக்குடி நகர உட்கோட்ட ஏ.எஸ். பி. மதன் மேற்பார்வையில், தூத்துக்குடி நகர உட்கோட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆயுதப்படையைச் சேர்ந்த 140 காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களை ஒருங்கிணைத்து 1572005 மற்றும் 167 2025 ஆகிய 2 நாட்கள் KRIYAVAN CYBER FORENSIC SERVICE எனும் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் இயக்குனருமான அசோக்குமார் மோகன் மூலம் சைபர் கவசம் (Cyber Sheild) எனும் தலைப்பில் ஆயுதப்படை அலுவலகத்தில் வைத்து சிறப்பு வகுப்புகள் நடைபெற்றது.



# தூத்துக்குடியில் சிறப்பாக பணியாற்றிய போலீசாருக்கு எஸ்.பி. பாராட்டு




தூத்துக்குடி ஜூலை 18

தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் நிலைய குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை கைது செய்து சொத்துக்களை பறிமுதல் செய்தும், சட்டவிரோத விற்பனைக்காக வைத்திருந்த புகையிலை பொருட்கள் மற்றும் மதுபாட்டில்களை பறிமுதல் செய்தும், நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்குகளில் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்று தர உதவியாக இருந்தும், காணாமல் போன வழக்குகளில் துரிதமாக செயல்பட்டு அவர்களை கண்டுபிடித்தும், சைபர் குற்ற வழக்குகளில் தொழில்நுட்ப ரீதியாக விசாரணை மேற்கொண்டு மோசடி செய்யப்பட்ட பணத்தை மீட்டது உட்பட கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் சிறப்பாக பணிபுரிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் உட்பட மொத்தம் 55 காவல்துறையினருக்கு மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் மாவட்ட காவல்துறை அலுவலகத்தில் வைத்து சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

# வள்ளியூரில் தங்க நகைக்காக மூதாட்டி கொலை: பெண் வேடமிட்ட வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூலை 18

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பகுதியில் கடந்த 8.7.2025 அன்று வீட்டில் இருந்த வயதான பெண் (72) ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில் காணப்பட்டார். அவரது மகன் பாலசுந்தர் கொடுத்தபுகாரின்பேரில் காவல் நிலையத்தில் சந்தேக மரண வழக்கு பதிவு செய்யப்பட்டது.

மூதாட்டியின் இறப்பு குறித்த காரணத்தை விரைந்து கண்டறிய திருநெல்வேலி எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவிட்டதன் பேரில், வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேஷ் மற்றும் போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் தலைமையில் தீவிர புலன் விசாரணை நடத்தப்பட்டது.



சம்பவ இடத்திற்கு அருகிலிருந்த சிசிடிவி பதிவுகளின் மூலம் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் ஒரு பெண்/திருநங்கை அல்லது பெண் வேடமிட்ட ஆண் என சந்தேகம் ஏற்பட்டது. தொடர்ந்து சமீபத்தில் வீட்டு வேலை மற்றும் பராமரிப்பு பணிக்காக வந்த நபர்கள் குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில் களக்காடு, சிதம்பரபுரத்தைச் சேர்ந்த வீரவேலின் மகன் விஜய் என்பவர் தனக்குள்ள கடன் பிரச்சினையினை சரி செய்ய, நகைகளை திருட திட்டமிட்டு, பெண் வேடமிட்டு வீட்டிற்குள் நுழைந்து அந்த மூதாட்டியை கொலை செய்து, அவர் கழுத்தில் இருந்த தங்க செயின், கைகளில் இருந்த தங்க வளையல்கள், தங்க மோதிரம் மற்றும் பீரோவில் வைத்திருந்த தங்க நகைகளை திருடிவிட்டு தப்பியுள்ளார்.

புலன் விசாரணையின் அடிப்படையில் குற்றவாளி விஜய்(28) கைது செய்ப்பட்டு, அவரை விசாரித்த போது, தங்க நகைக்காக மூதாட்டியை கொலைசெய்ததை அவர் ஒப்புக்கொண்டார். தொடர்ந்து திருடப்பட்ட நகைகளை மீட்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

எந்த ஒரு நேரடி சாட்சியோ, சிறு சாட்சியங்களோ இல்லாத நிலையில், சிசிடிவி பதிவில் கிடைத்த சிறிய தகவல்களின் அடிப்படையில் வழக்கை திறமையாக புலனாய்வு செய்து குற்றவாளியை கைது செய்து திருடப்பட்ட நகைகளை மீட்கும் பணியில் ஈடுபட்டு வரும் வள்ளியூர் டி.எஸ்.பி.வெங்கடேஷ், போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் மற்றும் வள்ளியூர் காவல்துறையினரை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# மானூரில் மது அருந்தியதால் ஏற்பட்ட தகராறில் வாலிபர் கொலை: 3 பேர் கைது




திருநெல்வேலி ஜூலை 18

திருநெல்வேலி மாவட்டம், மானூர் பகுதியில் கடந்த 14ம்தேதி 19 வயது மதிக்கத்தக்க வாலிபர் ஒருவர் சந்தேகத்திற்கு இடமான முறையில் இறந்த நிலையில் காணப்பட்டதன் பேரில், சம்பவ இடத்திற்கு காவல்துறையினர் விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இந்த இறப்பு சம்பந்தமாக கிராம நிர்வாக அலுவலர் அளித்த புகாரின் பேரில் மானூர் காவல் நிலையத்தில் சந்தேக மரண வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

வாலிபரின் மரணத்திற்கான காரணத்தினை விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவிட்டதன் பெயரில், ஊரக உட்கோட்ட டி.எஸ்.பி. ரகுபதிராஜா மற்றும் மானூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் ஆகியோர் தலைமையில் தீவிரமாக புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

வழக்கின் புலன் விசாரணையில் இறந்த நபர் திருநெல்வேலி மாநகரம் பழையபேட்டை பகுதியைச் சேர்ந்த வெற்றி (வயது 19) என கண்டறியப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற தீவிர புலன் விசாரணையில், இறந்து போன நபருடன் நெருக்கமாக பழகிய நபர்கள் பற்றி விசாரணை மேற்கொண்டு, அவர்களை பற்றிய தகவல்களை சேகரித்ததில், இறந்து போன நபர் செப்டிக் டேங் கிளினிங் வேலையில், தன்னுடன் வேலை செய்த தென்காசியைச் சேர்ந்த இசக்கிமுத்து(21), முக்கூடலைச் சேர்ந்த இசக்கிமுத்து(23) மற்றும் பழையபேட்டையைச் சேர்ந்த தங்ககுமார்(23) ஆகியோருடன் ஒன்றாக மது அருந்திய போது ஏற்பட்ட தகராறில், தாக்கியதில் கொலை செய்யப்பட்ட விபரம், அவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து தெரியவந்தது. இதனையடுத்து குற்றவாளிகள் அனைவரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆள் அரவமற்ற பகுதியில் மர்மமான முறையில் இறந்த இந்த சந்தேக மரண வழக்கினை துரித நேரத்தில் கண்டறிந்து, இறந்த நபரின் அடையாளத்தினை கண்டறிந்து, அவரது இறப்பிற்கு காரணமான கொலை குற்றவாளிகளை கைது செய்த ஊரக உட்கோட்ட டி. எஸ்.பி. ரகுபதிராஜா மற்றும் மானூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன் மற்றும் மானூர் காவல்துறையினரை மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# பள்ளிகளில் 'ப' வடிவ இருக்கைகள் குறித்து மருத்துவர்களை கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டும் ஓ. பன்னீர்செல்வம்

சென்னை, ஜூலை 18

தமிழ்நாடு முன்னாள் முதல்அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

எதிர்காலத் தூண்களாக விளங்கும் மாணவ, மாணவியரை நல்லவராகவும், வல்லவராகவும், புகழ் மிக்கவராகவும் வாழ வைக்க கல்வி மிகவும் அவசியம் என்பதன் அடிப்படையில் கட்டணமில்லாக் கல்வி தமிழ்நாட்டில் வழங்கப்பட்டு வருகிறது.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த கல்வியை மாணவ, மாணவியர் பயில ஏதுவாக, மலையாளத் திரைப்படத்தை அடிப்படையாகக் கொண்டு 'ப' வடிவிலான அல்லது 'யு' வடிவிலான இருக்கைகள் கொண்ட வகுப்பறைகளை தென் மாநிலங்கள் உருவாக்கி வருகின்றன. இதற்கான உத்தரவை தமிழ்நாடு அரசும் சமீபத்தில் பிறப்பித்துள்ளது.

வகுப்பறைகளில் கடைசி இருக்கை என்கிற கோட்பாட்டினை ஒழிக்கும் வகையிலும், மாணவ மாணவியரிடையே சம வாய்ப்பினை அளிக்கும் பொருட்டும் 'ப' வடிவிலான இருக்கை திட்டத்தை தமிழ்நாடு கொண்டு வந்திருக்கிறது என்றாலும், இதில் உள்ள பாதக அம்சங்களை ஆராய்வது அரசாங்கத்தின் கடமை.



"ப வடிவிலான இருக்கைகள் அமைக்கப்படுவதன் காரணமாக மாணவ மாணவியர் கழுத்தை நேரடியாக வைத்து கரும்பலகையை பார்க்க முடியாமல், கழுத்தை நீண்ட நேரம் ஒருபுறமாக வைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும், இதன் காரணமாக தசைக்கூட்டு (Musculoskeletal) மற்றும் எலும்பியல் (Orthopaedic) பாதிப்புகள், குறிப்பாக பத்து வயதிற்கு மேற்பட்ட மாணவ மாணவியருக்கு ஏற்படும் என்றும்; ஆசிரியர்களும் தங்கள் கழுத்தை இரு பக்கமும் திருப்பி மாணவ மாணவியருக்கு கற்பிக்க வேண்டியிருப்பதால், அவர்களுக்கும் இந்த பாதிப்பு ஏற்படும் என்றும் ஆசிரியர்களுக்கு மிக தொலைவில் அமர்ந்து இருக்கும் மாணவ மாணவியருக்கு ஆசிரியர்கள் கற்பிப்பது காதில் விழாத நிலை ஏற்படும் என்றும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், 'ப' வடிவிலான இருக்கைகள் அமைக்கப்பட்டால், தூரத்திலிருந்து பார்க்கும் அவசியம் மிகவும் குறைவாக உள்ள மாணவ, மாணவியருக்கு ஒளி விலகல் பிழைகள் (Refractive Errors) கவனிக்கப்படாத நிலை ஏற்படும் என்றும்; தற்போது நடைமுறையில் உள்ள இருக்கைகளில், பின் வரிசையில் அமர்ந்திருக்கும் குழந்தைகள் கரும்பலகையில் இருப்பதை படிக்க சிரமப்பட்டால், முன்கூட்டியே கண் பரிசோதனை செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்றும் கண் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

மொத்தத்தில், திரை அரங்குகளில் உள்ள இருக்கைகள் முறை மிகவும் பொருத்தமானது என்றும், இதன் மூலம் சிறந்த தெரிவு நிலை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல் இறுக்கம் வெகுவாக குறையும் என்பதுதான் மருத்துவர்களின் கருத்தாக இருக்கிறது.

முதல்அமைச்சர் இதில் உடனடிக் கவனம் செலுத்தி, ஆரோக்கியமான கல்வியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, கண் மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள் ஆகியோரை கலந்து ஆலோசித்து இருக்கைகள் குறித்து இறுதி முடிவு எடுக்குமாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வகுப்பறையில் ஆபாச பேச்சு: ஆசிரியர் மீது போக்சோ வழக்கு

திருநெல்வேலி மாவட்டம், வி.கே.புரம், பசுக்கிடைவிளையை சேர்ந்த ஜெயராஜ் (வயது 47) என்பவர் கடந்த 13ம்தேதி, வி.கே.புரம் கிருஷ்ணன் கோவில் அருகே தனது எலெக்ட்ரிக் பைக்கை நிறுத்தி விட்டு சென்றுள்ளார். பின்பு வந்து பார்த்த போது நிறுத்தியிருந்த இடத்தில் எலக்ட்ரிக் பைக்கை காணவில்லை. இதுகுறித்து ஜெயராஜ் வி.கே.புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் சிவா வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டார். அதில் ரவனசமுத்திரம், தெற்கு தெருவை சேர்ந்த முப்பிடாதி(26) என்பவர் எலெக்ட்ரிக் பைக்கை திருடியது தெரியவந்தது. இதனையடுத்து மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர், முப்பிடாதியை கைது செய்து, அவரிடமிருந்து எலக்ட்ரிக் பைக்கை பறிமுதல் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்தார்.

# திருநெல்வேலியில் திருட்டு வழக்கில் தலைமறைவானவர் கைது

திருநெல்வேலி ஜூலை 18

திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து பகுதியில் கடந்த 2021ம் ஆண்டு திருட்டு வழக்கில் ஈடுபட்ட கோவில்பட்டியை சேர்ந்த கண்ணன் (வயது 48) என்பவர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்தார். இவர் நீதிமன்ற விசாரணைக்கு கடந்த 1 ஆண்டாக ஆஜராகாமல் தலைமறைவாக

இருந்து வந்ததால், அவருக்கு திருநெ ல்வேலி குற்றவியல் நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்க ப்பட்டிருந்தது. இதனையடுத்து மேற்சொன்ன கண்ணனை தாழை யூத்து காவல் துறையினர் தேடி வந்த நிலையில், கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# பழவூரில் கஞ்சா விற்ற 3 வாலிபர்கள் கைது

திருநெல்வேலி மாவட்டம், பழவூர் பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் அனிஷ் தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அம்பலவாணபுரம் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த அம்பலவாணபுரத்தைச் சேர்ந்த செல்வம் (வயது 21),

நவீன்குமார்(19), வினோத்குமார்(19) ஆகிய 3 பேரை சோதனை செய்தனர். அப்போது அவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய 30 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன சப்இன்ஸ்பெக்டர், அந்த 3 பேரையும் பழவூர் காவல் நிலையம் அழைத்து வந்தார். இதுகுறித்து பழவூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜாராம் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து செல்வம், நவீன் குமார், வினோத்குமார் ஆகிய 3 பேரையும் கைது செய்து நடவடிக்கை எடுத்தார். மேலும் அவர்களிடமிருந்த 30 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தார்.

# கர்மவீரர் காமராஜரையே அசிங்கப்படுத்தியப் பிறகு கூட்டணியில் காங்கிரஸ் இருக்க வேண்டுமா? அண்ணாமலை கேள்வி

சென்னை, ஜூலை 18
திமுக எம்.பி. திருச்சி சிவா தமிழ்நாட்டின் முன்னாள் முதல்அமைச்சர் கர்மவீரர் காமராஜர் குறித்து கூறிய ஒருதகவல் சர்ச்சையாக்கப்பட்டுள்ளது. திருச்சி சிவா பேசும் போது, காமராஜர் ஏசி இல்லாமல் தூங்கமாட்டார், ஏனென்றால் அவருக்கு அலர்ஜி இருந்தது, இதனால் அவருடைய உடல்நிலை கருதி காமராஜர் தங்கும் அரசு பயணியர் விடுதிகளில் திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் அரசு சார்பில் ஏசி வசதி செய்து கொடுக்கப்பட்டது என கூறினார். தங்களை எதிர்த்து தான் அரசியல் செய்கிறார் என்றாலும் அவருக்கான மரியாதையை திமுக கொடுத்தது என தெரிவித்தார்.

ஆனால், திருச்சி சிவாவின் பேச்சுக்கு காங்கிரஸ் எம்பி ஜோதிமணி கடும் கண்டனம் தெரிவித்தார். காங்கிரஸ் நிர்வாகிகளும் திருச்சி சிவா பேச்சுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். காமராஜர் மீது மிகுந்த மரியாதை கொண்டவன். விவாதப் பொருளாக்கிட வேண்டாம். அன்புடன் வேண்டிக் கொள்கிறேன் இந்த சர்ச்சையை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று திருச்சி சிவா கூறியுள்ளார்.



இந்தநிலையில், திமுக பொருளாளர் டி.ஆர். பாலு தொடர்ந்த அவதூறு வழக்கில் பாஜக முன்னாள்தலைவர் அண்ணாமலை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜரானார். அதனை தொடர்ந்து அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: கர்மவீரர் காமராஜரை பற்றி பேசுவதற்கு தி.மு.க.விற்கு அருகதை இல்லை.ஆட்சி அதிகாரத்தில் இருந்தும் சொத்துக்களை சேர்க்காமல் தனது கடைசி காலம் வரை எளிமையாக வாழ்ந்தவர் காமராஜர். தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என விமர்சித்தவர் காமராஜர்.

வரலாற்றை மாற்றி, திரித்து ஆளும் திமுக, கர்மவீரர் காமராஜரை கேவலப்படுத்தியுள்ளனர். இதை நான் கண்டிக்கிறேன். இதற்காக காங். தலைவரின் வெறும் கண்டன அறிக்கை மட்டும் போதுமா? உண்மையாகவே காமராஜர் ஆட்சி வேண்டுமென்று பேசும் காங்கிரஸ், திமுக கூட்டணியிலிருந்து வெளியே வரத் தயாரா? குறைந்த பட்சம் மானத்தை காப்பாற்ற தனித்துப் போட்டியிடத் தயாரா? கர்மவீரர் காமராஜரையே அசிங்கப்படுத்தியப் பிறகு அந்தக் கூட்டணியில் காங்கிரஸ் இருக்க வேண்டுமா? என்பதை நான் மட்டுமல்ல.. சாதாரண மக்களும் கேட்கிறார்கள் என்றார்.

# 13 அரசு மருத்துவ கல்லூரிகளில் முதுநிலை பட்டப்பிரிவுகளில் 488 இடங்கள் அதிகரிப்பு



சென்னை, ஜூலை 18
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:
தமிழ்நாட்டில் எம்.பி.பி.எஸ் (இளங்கலை மருத்துவம்) மற்றும் பி.டி.எஸ்.(பல் மருத்துவம்) பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் கடந்த ஜூன் மாதம் 6ந் தேதி முதல் ஜூன் 29ந் தேதி வரையில் பெறப்பட்டது. அதில் மொத்தம் 72 ஆயிரத்து 743 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒரு சில விண்ணப்பங்களில் சான்றிதழ்களை இணைக்க மாணவர்கள் மறந்துவிட்டனர். அவர்களுக்கு 2 நாட்கள் கால அவகாசம் தரப்பட்டது. இந்த 2 நாளில் சான்றிதழ்களை இணைத்து மீண்டும் தந்தால் அந்த விண்ணப்பங்கள் சரி பார்த்து தகுதி பட்டியலில் சேர்க்கப்படும்.

தகுதி பட்டியல் சரி பார்க்கப்பட்டபோது 20 பேர் போலி சான்றிதழ்கள் சமர்ப்பித்தது கண்டறியப்பட்டு உள்ளது. எனவே, இந்த 20 மாணவர்கள் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு தகுதி நீக்கம் செய்யப்பட்டுஉள்ளனர். மேலும், 3 ஆண்டுகள் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கு தடை செய்யப்பட்டு உள்ளது. அதுமட்டுமில்லாமல் இவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கிறது.

20 மாணவர்களில் 7 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்களையும், 9 மாணவர்கள் பிறப்பிட சான்றிதழ்கள் மற்றும் சாதி சான்றிதழ்களையும், 4 மாணவர்கள் என்.ஆர்.ஐ. தகுதிக்கான தூதரக சான்றிதழ்களையும் போலியாக தந்துள்ளனர்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலனை முடிந்து இறுதி பட்டியல் வரும் 25ந் தேதி காலை 10 மணிக்கு வெளியிடப்பட உள்ளது. அதன்பின், மத்திய அரசின் கால அட்டவணைப்படி வரும் 30ந் தேதி காலை 10 மணி முதல் கலந்தாய்வு தொடங்கப்பட இருக்கிறது.

தமிழ்நாட்டில் 13 மருத்துவக் கல்லூரிகளில் புதிதாகபாடப்பிரிவு தொடங்குவதற்கு அனுமதி பெற்றுள்ளோம். இன்னும் 10 நாட்களில் தொடங்கப்பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறியிருந்தார். இந்நிலையில் 13 மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கிண்டி கலைஞர் நூற்றாண்டு பல் நோக்கு மருத்துவமனையில், முதுநிலை பட்ட மேற்படிப்புகளில் 488 இடங்களை அதிகரித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அடுத்த கல்வியாண்டு முதல் கூடுதல் இடங்கள் நடைமுறைக்கு வரும் என்று அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெக கட்சிக் கொடி விவகாரம்: விஜய் பதிலளிக்க சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜூலை 18
நடிகர் விஜய்யின் த.வெ.க. கட்சிக் கொடி நிறம் தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் புதிய வழக்கு தொடரப்பட்டிருந்தது.தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை என்ற அமைப்பு சார்பில் இந்த வழக்கானது பதிவு செய்யப்பட்டது.

தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை, தமிழக அரசு பதிவுத்துறையில் பதிவு செய்யப்பட்டு அறக்கட்டளையாக செயல்பட்டு வருகிறது. இந்தசபைக்கு சிவப்பு மஞ்சள் சிவப்பு நிறங்கள் இடம்பெற்றுள்ள கொடி உருவாக்கப்பட்டு கடந்த 2023ம் ஆண்டு வர்த்தக முத்திரைக்கான பதிவையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளது.

இந்தநிலையில்தவெக கட்சித் தலைவர் விஜய் கடந்த 2024 தொடங்கி கட்சியின் கொடி அறிமுகம் செய்தார்.

அதில் சிவப்பு மஞ்சள் சிவப்பு நிறங்கள் இடம் பெற்றிருந்தது. இதை எதிர்த்தும், தவெக கட்சி கொடியில் உள்ள வண்ணங்களை நீக்க உத்தரவிடக் கோரியும் தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை நிறுவனர் தலைவர் பச்சையப்பன் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

அந்த மனுவில், தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை மட்டுமே குறிப்பிட்ட நிறங்களை கொண்ட கொடியை பயன்படுத்த உரிமை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஏற்கெனவே தமிழக வெற்றிக் கழக கொடியில் உள்ள யானை சின்னத்தை அகற்றக் கோரி பகுஜன் சமாஜ் கட்சி தொடர்ந்த வழக்கு சென்னை உரிமையியல் கோர்ட்டில் நிலுவையில் உள்ள நிலையில், தவெக கட்சி கொடியில் இடம் பெற்றுள்ள வண்ணத்தை நீக்க கோரி மேலும் ஒரு வழக்கு தொடரப்பட்டுள்ளது அக்கட்சிக்கு நெருக்கடியை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் தவெக கட்சிக் கொடி தங்கள் அமைப்பின் கொடியை பிரதிபலிப்பதாக தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலனசபைஎன்றஅமைப்பு தொடர்ந்த வழக்கு தொடர்பாக தவெக மற்றும் அதன் தலைவர் விஜய் பதிலளிக்க ஐகோர்ட்டு உத்தரவு பிறப்பித்துள்ளது

# எல்லை மீறிய ரீல்ஸ் மோகம்: நைட்டி அணிந்து குத்தாட்டம் போட்ட இளைஞர்கள் அதிரடி காட்டிய போலீசார்

களியக்காவிளை, ஜூலை 18
குமரிமாவட்டம் குழித்துறையில் நடந்து வரும் வாவுபலி பொருட்காட்சியில், 'ரீல்ஸ்' மோகத்தில் சில இளைஞர்கள் கூட்டத்தின் இடையே முகம் சுளிக்க வைக்கும்படி குத்தாட்டம் போட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதாவது குழித்துறை நகராட்சி சார்பில் வாவுபலி பொருட்காட்சி நடந்து வருகிறது. இந்த பொருட்காட்சியை காண தினமும் ஏராளமானோர் குடும்பம், குடும்பமாக வந்து செல்கிறார்கள்.

அந்த சமயத்தில் திடீரென இளைஞர்கள் சிலர் கூட்டத்தினரிடையே நைட்டி அணிந்தபடி புகுந்தனர். அதோடு நின்றுவிடாமல் அதே உடையுடன் ரெயில் பெட்டி போன்று இளைஞர்கள் ஒன்று சேர்ந்து வலம் வந்தபடி பொதுமக்களுக்கு இடையூறையும் ஏற்படுத்தினர். இதனை சற்றும் எதிர்பார்க்காத பெண்கள் அச்சம் அடைந்தனர். ஆனாலும் இளைஞர்களின்



ஆட்டம் நின்றபாடில்லை. நைட்டியை தூக்கியபடி மாடல் அழகி நிகழ்ச்சி போன்றும் செய்து காட்டினர். இது பெண்களை முகம் சுளிக்கும் வகையில் இருந்தது. இந்த வீடியோ தற்போது சமூகவலைத்தளத்தில் வைரலாகி வருகிறது. பொதுஇடத்தில் இதுபோன்று அநாகரீகமாக செயல்பட்ட இளைஞர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சமூகவலைத்தளத்தில் பலரும் கருத்துகளை பதிவிட்டனர். இது தொடர்பாக பள்ளியாடி பகுதியைச் சேர்ந்த மார்சல் (வயது 25), சஜூ (24) உள்பட 7 பேர் மீது களியக்காவிளை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கீழடி விவகாரம்: எழுத்துப்பிழையை திருத்துவேன், உண்மையைத் திருத்த மாட்டேன் அமர்நாத் ராமகிருஷ்ணன்



சென்னை, ஜூலை 18
கீழடியில் ஆய்வு மேற்கொண்டு கிமு.8 நூற்றாண்டில் என்னென்ன பயன்படுத்தப்பட்டது. அந்த கால மக்களின் நாகரிகம், விவசாயம், விலங்குகள், கலாசாரம் பழக்கவழக்கம் எப்படி இருந்தது, இரும்பு பயன்படுத்தியது என அமர்நாத் ஐஏஎஸ் கண்டுபிடித்து, இந்திய தொல்லியல் துறைக்கு ஆய்வு மேற்கொண்டிருந்தார்.

அந்த ஆய்வு அறிக்கையை கிமு 3 ஆம் நூற்றாண்டு என திருத்துமாறு மத்திய அரசு, அமர்நாத்துக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக கூறப்படுகிறது. கீழடி தொல்லியல் ஆய்வு பொறுப்பாளராக ஸ்ரீராம் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் 3ஆம் கட்ட அகழாய்வு நடத்தி, அமர்நாத் குறிப்பிடும் படியான கண்டுபிடிப்புகள் ஏதும் இல்லை என கூறியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐஏஎஸ் அதிகாரி அமர்நாத், ஆங்கில நாளிதழுக்கு பேட்டி அளித்துள்ளார். அந்த பேட்டியில் அவர் கூறுகையில், கீழடி அறிக்கையின் உண்மையை திருத்தச் சொல்வது குற்றம், அநீதியானது. நான் கண்டுபிடித்ததை திருத்தினால் நான் குற்றவாளியாகிவிடுவேன்.

நான் தாக்கல் செய்த 982 பக்கங்களில் எழுத்துப் பிழையை வேண்டுமானால் திருத்த தயாராக இருக்கிறேன். ஆனால் உண்மையை திரித்து எழுத முடியாது. கிமு 8ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்ததை கிமு. 3 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்தவை என மத்திய அரசு மாற்ற வலியுறுத்துகிறது.

நான் கண்டுபிடித்த விஷயங்களையே மாற்றச்சொன்னால் கீழடியின் தொன்மையை சிதைக்கும் செயலாகும்.

மத்திய கலாச்சாரத் துறை மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத் எனது அறிக்கையை முதலில் படிக்கட்டும். இந்தியாவில் பலதரப்பட்ட கலாசாரங்கள் உள்ளன. அதை மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டும். சிந்து சமவெளி நாகரீகம், வேத காலம், மவுரிய, ஹர்ஷவர்தன் காலத்தையே மத்திய அரசு பேசி வருகிறது. ஆனால் சங்க கால வரலாற்றை பற்றி ஏன் மத்திய அரசு ஆய்வு செய்யவில்லை.

மூன்றாவது கட்ட அகழாய்வில் ஈடுபட்ட ஸ்ரீராம், கீழடி அகழாய்வு குறித்து எந்த பின்னணியும் தெரியாதவர். அவரை ஆய்வு செய்ய சொன்னால் "ஒன்றும் இல்லை" என்றுதான் சொல்வார். இவ்வாறு அமர்நாத் ராமகிருஷ்ணா தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் கீழடியில் 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை மத்திய அரசு சார்பில் அகழாய்வு பணியை தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் மேற்கொண்டார். இந்த அகழாய்வின் போது 5000க்கும் மேற்பட்ட பழைமை வாய்ந்த பொருள்கள் கிடைத்தன. இந்நிலையில் திடீரென அமர்நாத் ராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

கீழடியில் கண்டறியப்பட்ட மனித மண்டை ஓட்டை வைத்து நம் மூதாதையர்கள் எப்படி இருந்தார்கள் என கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் இருந்த அடையாளமும், பருத்தி விளைச்சல், திணை அரிசி விளைச்சல் உள்ளிட்டவையும் இருந்தது கண்டறியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாடிக்கொண்டிருந்த போது.. தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து குழந்தை பலியான சோகம்

திருவண்ணாமலை ஜூலை 18
திருவண்ணாமலை மாவட்டம் கலசபாக்கத்தை அடுத்த தேவனாம்பட்டு ஊராட்சி காட்டுப்புத்தூர் காலனியைச் சேர்ந்தவர் பழனி. கூலித்தொழிலாளி. இவரது மனைவி பார்கவி. இவர்களது மகள் பிரவீனா 1ம் வகுப்பு படித்து வருகிறாள். மகன் முகிலனுக்கு 2 வயதாகி இருந்தது. நேற்று முன்தினம் முகிலன் வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தான்.

இதை யாரும் கவனிக்கவில்லையென தெரிகிறது. அப்போது வீட்டின் அருகே உள்ள தண்ணீர் தொட்டியில் முகிலன் தவறி விழுந்து விட்டான். சற்றுநேரம் கழித்து தாயார் பார்கவி வந்த போது அவனை காணவில்லை. தொடர்ந்து தேடியபோது, தண்ணீர் தொட்டியில் முகிலன் மூச்சுத்திணறி மயங்கி கிடந்ததை பார்த்து கதறியபடி மகனை மீட்டார்.

பின்னர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் முகிலனை நார்த்தாம்பூண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

அங்கு முதலுதவி சிகிச்சைக்கு பின் மேல் சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.



அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்தபோது முகிலன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

# பயணிகளை இறக்கிவிட்டு அரசு பஸ் ஜப்தி கோயம்பேடு பஸ்நிலையத்தில் பரபரப்பு



சென்னை, ஜூலை18
மயிலாடுதுறையைச் சேர்ந்தவர் பன்னீர்செல்வம். இவர் அரசு போக்குவரத்து கழகத்தில் கண்டக்டராக பணிபுரிந்து வந்தார். சில காரணங்களுக்காக அவர் பணியிட நீக்கம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து கோர்ட்டுக்கு சென்று அவர் மீண்டும் பணியில் சேர்ந்தார். அவருக்கு தரவேண்டிய நிலுவைத்தொகையை வழங்காமல் 20 ஆண்டுகளுக்கு மேலாக அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் இழுத்தடித்து வந்தனர். இது குறித்து பன்னீர்செல்வம், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அவருக்கு நிலுவைத் தொகை ரூ.11 லட்சத்தை தர வேண்டும் என கோர்ட்டு உத்தரவிட்டது. ஆனால் இதுவரையிலும் அந்த பணத்தை பன்னீர் செல்வத்துக்கு வழங்காததால் வெளி மாநிலங்களுக்கு செல்லக்கூடிய அரசு பஸ்சை ஜப்தி செய்ய ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

அதன்பேரில் கோயம்பேட்டிலிருந்து பெங்களூரு செல்லும் அரசு சொகுசு பஸ்சை கோர்ட்டு ஊழியர்கள் நேற்று ஜப்தி செய்தனர். இதனால் அரசு பஸ்சில் இருந்த பயணிகள் இறக்கி விடப்பட்டு, வேறு பஸ்களில் ஏற்றி அனுப்பப்பட்டனர்.

# படித்த பள்ளிக்கே தலைமை ஆசிரியையான பழங்குடியின பெண் ; குவியும் பாராட்டு



கன்னியாகுமரி, ஜூலை 18
கன்னியாகுமரி மாவட்டம் களியல் அருகே பேணு பகுதியை சேர்ந்தவர் ஷீலா. இவர் பத்துகாணி அரசு உண்டு உறைவிட பள்ளியில் மாணவியர் விடுதியில் தங்கி, பள்ளி படிப்பை முடித்தார். பின்னர் ஆசிரியர் பயிற்சி முடித்து வட்டப்பாறை தொடக்கப்பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வந்த நிலையில் தற்போது பத்து காணி அரசு உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் தொடக்கப்பள்ளி தலைமையாசிரியையாக பொறுப்பேற்றுள்ளார்.

ஷீலாவுக்கு மது என்ற கணவரும், சபரீஷ், சக்திவேல் என்ற 2 மகன்களும் உள்ளனர். மதுரப்பர்பால்வெட்டும் வேலைக்கு சென்று வருகிறார். சபரீஷ் 12ம் வகுப்பும், சக்திவேல் 9ம் வகுப்பும்படிக்கிறார்கள். தான் படித்த பள்ளியிலேயே தலைமை ஆசிரியராக, பழங்குடியின பெண் ஷீலா பொறுப்பேற்ற சம்பவத்தை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர். மேலும் அவருடைய பெருமை பற்றிய வீடியோவும் சமூகவலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# கருணாநிதி சிலை மீது கருப்பு பெயிண்டு ஊற்றப்பட்ட விவகாரம்: 77 வயது மருத்துவர் கைது

சேலம், ஜூலை 18
சேலம் 4 ரோடு அண்ணா பூங்கா அருகில் முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதிக்கு 16 அடி உயரத்தில் முழு உருவ வெண்கலச் சிலை உள்ளது. எப்போதும் மக்கள் நடமாட்டம் இருக்கும் இந்த பகுதியில் நேற்று அதிகாலை வழக்கம் போல மக்கள் நடமாட்டம் இருந்தது.

அப்போது அந்த சிலையின் வலது பகுதியிலும், சிலைக்கான 4 அடி பீடத்திலும் கருப்பு பெயிண்டு ஊற்றப்பட்டு இருந்தது. இதை அந்த வழியாக சென்றவர்கள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். தகவல் அறிந்தவுடன் தி.மு.க.வினர் அண்ணா பூங்கா அருகில் குவிய தொடங்கினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

தகவல் அறிந்த போலீஸ் உதவி கமிஷனர் அஸ்வினி, அஸ்தம்பட்டி போலீஸ் இன்ஸ்பெக்டர் தவமணி மற்றும் போலீசார் அங்கு விரைந்து சென்று பார்வையிட்டு சிலை மீது பெயிண்டு ஊற்றிய மர்ம நபர் குறித்து விசாரித்தனர். இதற்கிடையே சம்பவ இடத்துக்கு கைரேகை நிபுணர் வடிவேல் தலைமையிலான குழுவினர் வந்து அங்கு பதிவான கைரேகைகளை சேகரித்தனர்.



அங்கு பதிவான கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்தனர்.

அதில் முதியவர் ஒருவர் பெயிண்டு டப்பாவுடன் அந்த வழியாக செல்வது போன்று பதிவாகி இருந்தது. அதன் அடிப்படையில் அவரை போலீசார் தேடி வந்தனர். இந்த நிலையில், கருணாநிதி சிலை மீது கருப்பு பெயிண்டு ஊற்றப்பட்ட விவகாரத்தில் 77 வயது மருத்துவர் விஸ்வநாதனை தனிப்படை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
18.7.2025

# நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பு: சங்கரன்கோவில் நகர்மன்றத் தலைவர் தோல்வி



தென்காசி ஜூலை 18

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சியின் நகர்மன்ற தலைவராக இருந்தவர் உமா மகேஸ்வரி. இவர் திமுகவைச் சேர்ந்தவர். அதிமுகவைச் சேர்ந்த கண்ணன் என்கிற ராஜூ துணைத்தலைவராக உள்ளார். உள்ளாட்சி தேர்தலில் உமா மகேஸ்வரியும், அதிமுக முத்துலட்சுமியும் தலா 15 வாக்குகள் பெற்றனர். சம நிலையில் இருந்ததால் குலுக்கல் முறையில் உமா மகேஸ்வரி தேர்வானார். அவர் நகர்மன்ற தலைவராக தேர்வானது முதற்கொண்டே அவருக்கும் கவுன்சிலர்களுக்கு இடையே ஏழாம் பொருத்தம்தான்.

ஒரு சில மாதங்கள் மட்டும் நகர்மன்ற கூட்டம் அமைதியாக நடந்தது. அப்புறம் விவாதம் வாக்குவாதம் என்று தீர்மானங்களை நிறைவேற்ற முடியாத நிலை இருந்தது. இந்த சங்கரன்கோவில் நகராட்சியில் மொத்தம் 30 வார்டுகள். இந்த 30 கவுன்சிலர்களில் திமுக, அதிமுக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 29 கவுன்சிலர்கள் உமா மகேஸ்வரிக்கு எதிராக நிற்கும்படி உமா மகேஸ்வரியின் நடவடிக்கை இருந்தது என்கிறார்கள்.

சங்கரன் கோவில் நகராட்சியில் கடந்த பல மாதங்களாகவே அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரவில்லை என்று சொல்லி பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இதனால் சங்கரன் கோவில் நகராட்சி கவுன்சிலர்கள் அனைவரும் உமா மகேஸ்வரியிடம் முறையிட்டு வந்துள்ளனர். அவர்களின் முறையீட்டுக்கு செவிசாய்க்காமல் இருந்து வந்ததால் உமா மகேஸ்வரிக்கும் கவுன்சிலர்களுக்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம் நடந்து வந்துள்ளது.

நகராட்சி கூட்டங்களிலும் இந்த மோதல் எதிரொலித்து வந்துள்ளது. அடிக்கடி உமா மகேஸ்வரியுடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டு கவுன்சிலர்கள் வெளிநடப்பு செய்து வந்துள்ளனர். இந்த விவகாரம் வலுத்துக்கொண்டே சென்றதால்

இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று திமுக, காங்கிரஸ், மதிமுக மற்றும் சுயேட்சைகள் என்று எல்லோரும் ஒன்று கூடி கடந்த 2023 ஆம் ஆண்டில் உமா மகேஸ்வரி மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்தனர். அப்போது திமுக தரப்பில் தலையீடு இருந்து சமரசம் செய்து வைக்கப்பட்டது.

இதனால் அன்றைக்கு உமா மகேஸ்வரி பதவி தப்பியது. ஆனாலும், இந்த மோதல் போக்கு நீடித்தது. இதனால் 26 கவுன்சிலர்கள் ஒன்று கூடி, உமா மகேஸ்வரியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து, அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று நகராட்சி ஆணையாளரிடம் கடந்த மாதம் 2ஆம் தேதி அன்று மனு அளித்திருந்தனர். இந்த மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களிடம் அப்போது ஆணையாளர் உறுதி அளித்திருந்தார்.

இந்த சூழலில் கடந்த 2ம் தேதியன்று உமா மகேஸ்வரிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கான வாக்கெடுப்பு நடந்தது. இதில் 29 கவுன்சிலர்கள் பங்கேற்று வாக்குகளை செலுத்தினர். அதில் ஒரே ஒரு வாக்கு மட்டுமே உமா மகேஸ்வரிக்கு கிடைத்தது. வாக்கெடுப்பில் 28 ஆதரவு வாக்குகள் பெற்று நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேறியது. உமா மகேஸ்வரி பதவியை இழந்தார்.

இதனைத்தொடர்ந்து உயர்நீதிமன்றத்தை உமா மகேஸ்வரி நாடிய நிலையில், இன்று பலத்த பாதுகாப்புடன் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்நிலையில் இன்று நடைபெற்ற நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான வாக்கெடுப்பில் சங்கரன் கோவில் நகர்மன்றத் தலைவர் உமா மகேஸ்வரி தோல்வி அடைந்தார்.

இன்று கவுன்சிலர்களிடையே நடந்த ரகசிய வாக்கெடுப்பிலும் 28 வாக்குகள் தீர்மானத்திற்கு ஆதரவாக விழுந்துள்ளன. இதனைத்தொடர்ந்து சங்கரன்கோவில் நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி நகர்மன்றத் தலைவர் பதவியை இழந்தார்.

# ஆரணி ஜாத்திரை திருவிழா... சர்வ அலங்காரத்தில் கங்கையம்மன் திருவீதி உலா



திருவள்ளூர் ஜூலை 18

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி தமிழ் காலனியில் கங்கை அம்மன் திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் கடந்த 8ம் தேதி செவ்வாய்க்கிழமை ஜாத்திரை திருவிழா துவங்கியது. புதன்கிழமை கரகம் வெளியில் வரும் நிகழ்ச்சியும், வியாழக்கிழமை கங்கை அம்மனுக்கு சிறப்பு பூஜையும், வெள்ளிக்கிழமை கிராம தேவி எல்லை அம்மனுக்கு வாடை பொங்கல் வைக்கும் நிகழ்ச்சியும், சனிக்கிழமை வெங்கடேச பெருமாளுக்கு சிறப்பு அபிஷேகம், மகா அலங்காரம், மகா தீபாராதனையும் நடைபெற்றன. பின்னர் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை கங்கை அம்மனுக்கு கூழ் ஊற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. திங்கட்கிழமை காலை கங்கையம்மன் திருக்கோவிலில் இருந்து பக்தர்கள் ஊர்வலமாக காணியம்மன் திருக்கோவிலுக்கு வந்தனர். பின்னர், அனைத்து பக்தர்களும் வாடை பொங்கல் வைத்து அம்மனுக்கு நெய்வேத்யம் செய்தனர். செவ்வாய்க்கிழமை கங்கையம்மனுக்கு வாடை பொங்கல் வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

புதன்கிழமை (நேற்று) இரவு ஆரணி சம்பங்கி புச்சாலீஸ்வரர் திருக்கோவிலிலிருந்து பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட கங்கையம்மன் முக்கிய வீதிகளின் வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், ஆரணி தமிழ் காலனியை சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். இன்று காலை மஞ்சள் நீராட்டல் நிகழ்ச்சியும், உறியடித்தல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

# அரக்கோணம் அருகே டேங்கர் லாரி கார் மோதி விபத்து: 3 பேர் உயிரிழப்பு




அரக்கோணம், ஜூலை 18

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே டேங்கர் லாரி, கார் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், 3 பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

கார் மெக்கானிக் வெங்கடேசன் (55) அவரது மனைவி மற்றும் 19 வயது மகனுடன் கோவிலுக்குச் சென்று வீடு திரும்பும்போது நடந்த இந்த கோர விபத்தில், மனைவி நிகழ்விடத்திலேயே உயிரிழந்தார். படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட வெங்கடேசன் மற்றும் அவரது மகன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். மேலும் விபத்தில் சிலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக கூறப்படுகிறது. இந்த விபத்து குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (18.7.2025)

**மேஷம்:** பணவரவு சீராக இருக்கும். திட்டமிட்ட வேலைகள் முழுமையாக முடியும். நம்பிக்கை மேலோங்கும். பரிகாரம்: விநாயகர் வழிபாடு நன்மை தரும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் மனஅமைதி உருவாகும். நீண்டநாள் பிரார்த்தனை நிறைவேறும். பரிகாரம்: தேவி ஸ்லோகங்கள் பாராயணம் செய்யவும்.

**மிதுனம்:** நண்பர்களிடம் கருத்து வேறுபாடு ஏற்படலாம். பொறுமை மிக முக்கியம். பரிகாரம்: ராகு கெது பகவான்களுக்கு நிவேதனம் செய்யவும்.

**கடகம்:** புதிய செயல்களில் வெற்றி. எதிர்பாராத சந்திப்பு மகிழ்ச்சி தரும். பரிகாரம்: சந்திர பகவானை தரிசிக்கவும்.

**சிம்மம்:** தொழிலில் எதிர்பார்த்த வெற்றி. உயரதிகாரிகள் பாராட்டு பெறுவீர்கள். பரிகாரம்: சூரிய நமஸ்காரம் செய்வது நன்மை தரும்.

**கன்னி:** பணச் செலவுகள் அதிகரிக்கும். சலிப்பான மனநிலை ஏற்படும். சற்றே எச்சரிக்கையாக இருங்கள். பரிகாரம்: விஷ்ணு ஸ்தோத்ரம் பாடுங்கள்.

**துலாம்:** பழைய கடன்களில் சிலதுக்கு தீர்வு கிடைக்கும். வழக்குகள் அனுகூலமாக முடியும். பரிகாரம்: குபேர வழிபாடு பயன் தரும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் சந்தோஷம். வெளியூர் பயண வாய்ப்பு. பழைய உறவுகள் மீண்டும் விரிவடையும். பரிகாரம்: சனி பகவான் வழிபாடு சிறந்தது.

**தனுசு:** முயற்சியில் வெற்றி. உத்தியோகத்தில் பதவி உயர்வு. புதிய வாய்ப்பு வரும். பரிகாரம்: குரு பகவான் வழிபாடு நல்லது

**மகரம்:** வீடு, வாகன தொடர்பான நல்ல செய்திகள். குடும்ப மகிழ்ச்சி கூடும். பரிகாரம்: ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் பாராயணம் செய்யவும்.

**கும்பம்:** பணவரவு கூடும். கவனமாக செயல்பட வேண்டிய நாள். சிலர் உங்கள் நேர்மையை சோதிக்க முயலுவார்கள். பரிகாரம்: துர்கை அம்மன் வழிபாடு நன்மை தரும்.

**மீனம்:** கல்வி, கலை, எழுத்து தொடர்பானவோருக்கு சாதகமான நாள். கவுரவம் கிடைக்கும். பரிகாரம்: தட்சிணாமூர்த்தி வழிபாடு சிறந்தது.

# மதுபோதையில் நடந்த கொடூரம்.. 75 வயது மூதாட்டியை பலாத்காரம் செய்ய முயன்ற மருமகன்



கோவை, ஜூலை 18

கோவை கவுண்டம்பாளையம் அருகே உள்ள பகுதியை சேர்ந்த 51 வயதானவர் கூலி வேலை செய்து வருகிறார். இவருக்கு 22 வயதில் மகன் உள்ளார். இந்த நிலையில் அந்த தொழிலாளியின் மாமியாரான 75 வயது மூதாட்டி அவர்களுடன் வசித்து வருகிறார். அந்த மூதாட்டி தனது மகள் வீட்டில் இல்லாத நேரத்தில் மருமகன் மற்றும் பேரனுக்கு சமைத்து கொடுத்து வந்ததுடன், அவர்கள் 2 பேரையும் நன்றாக கவனித்து வந்தார்.

கூலி தொழிலாளிக்கு மதுகுடிக்கும் பழக்கம் உள்ளதாக கூறப்படுகிறது. நேற்று முன்தினம் இரவில் குடிபோதையில் வந்த அவர் தனது அறைக்கு தூங்க சென்றுவிட்டார். 75 வயது மூதாட்டியும் தனி அறையில் தூங்கிக்கொண்டிருந்தார்.

மூதாட்டி பயங்கரமாக அலறும் சத்தம் கேட்டது. இதனால் திடுக்கிட்டு எழுந்த மூதாட்டியின் பேரன் அங்கு சென்று பார்த்தார். அப்போது மது போதையில் இருந்து தனது தந்தை, பாட்டியை பலாத்காரம் செய்ய முயன்றது தெரியவந்தது.

இதையடுத்து அவர் தந்தை என்றும் பாராமல் சரமாரியாக தாக்கினார். இதற்கிடையில் சத்தம் கேட்டு அங்கு வந்த அக்கம் பக்கத்தினர் தொழிலாளியை மீட்டு போலீசாருக்குதகவல்கொடுத்தனர். தகவல் அறிந்து வந்த கவுண்டம்பாளையம் போலீசார் விசாரணை நடத்தினர்.

பாலியல் விவகாரம் என்பதால் இதுகுறித்து கோவை மாநகர மத்திய மகளிர் போலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அந்த தொழிலாளியை கைது செய்தனர்.

# ஹாரி பாட்டர் பட நடிகை 6 மாதங்கள் வாகனம் ஓட்ட தடை



'ஹாரி பாட்டர்' திரைப்படங்கள் மூலம் உலகளவில் பிரபலமடைந்த நடிகை எம்மா வாட்ஸனுக்கு, 6 மாதங்களுக்கு வாகனம் ஓட்ட தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் நகரத்தை சேர்ந்த பிரபல ஹாலிவுட் நடிகையும், விளம்பர அழகியுமானவர் எம்மா வாட்சன். இவர் ஹாரி பாட்டர் திரைப்படங்களில் வரும் ஹெர்மாயினி கிரேஞ்சர் எனும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். கடந்த 2001ம் ஆண்டு முதல் 2011 ம் ஆண்டு வரை 8 ஹாரி பாட்டர் படங்களில் நடித்துள்ளார். தனது 10 வயது முதல் நடிக்க வந்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமடைந்தார். கடந்த சில ஆண்டுகளாக திரையுலகில் இருந்து விலகி இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டம் படித்து வந்தார்.

நடிகை எம்மா வாட்ஸன், கடந்த 2024ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலுள்ள ஆக்ஸ்போர்ட் நகரத்தில், 48 கி.மீ. வேகத்தில் செல்ல வேண்டிய சாலையில், 60 கி.மீ. வேகத்தில் தனது வாகனத்தை ஓட்டியதாகக் கூறப்படுகிறது. .இதுகுறித்து, சி.சி.டி.வியில் பதிவு செய்யப்பட்ட காட்சிகளின் மூலம் அவர் மீது குற்றம்சுமத்தப்பட்ட நிலையில், தற்போது 6 மாதங்களுக்கு அவர் வாகனம் ஓட்டுவதற்குத் தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ 1 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

# ரெட் பிளவர் படத்தின் டிரெய்லர் வெளியானது




ஆண்ட்ரூ பாண்டியன் இயக்கத்தில் விக்னேஷ் கதாநாயகனாக நடித்துள்ள படம் 'ரெட் பிளவர்'. சயின்பிக்சன் ஆக்சன் கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படத்தில் மனிஷா ஜஷ்னானி கதாநாயகியாக நடித்துள்ளார்.

மேலும், நாசர், தலைவாசல் விஜய், ஜான் விஜய், ஒய்.ஜி. மகேந்திரன், லீலா சாம்சன், நிழல்கள் ரவி, டி.எம். கார்த்திக், சுரேஷ் மேனன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஸ்ரீ காளிகாம்பாள் பிச்சர்ஸ், தயாரிப்பாளர் கே. மாணிக்கம் இந்த படத்தை தயாரித்துள்ளார். இப்படம் வருகிற ஆகஸ்ட் மாதம் 8ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

இந்த படத்தின் பாடல் வெளியிட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இந்த நிலையில், ரெட் பிளவர் படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. இந்த டிரெய்லர் மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்துவருகிறது.

# அனுபமாவின் "பரதா" ரிலீஸ் தேதி அறிவிப்பு




'பிரேமம்' படம் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் அனுபமா பரமேஸ்வரன். அப்படத்தின் இமாலய வெற்றியின் மூலம் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் நடிக்க துவங்கினார். தமிழில் தனுஷ் உடன் 'கொடி' படத்தில் நடித்திருந்தார். தெலுங்கில், 'கார்த்திகேயா 2', '18 பேஜஸ்', 'டில்லு ஸ்கொயர்' ஆகியபடங்களில் நடித்திருக்கிறார். இப்படங்கள் வசூல் ரீதியாக பெரிய வெற்றியைப் பெற்றதால் அனுபமா தன் சம்பளத்தை உயர்த்தியுள்ளதாக கூறப்படுகிறது. அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் வெளியான டிராகன் படத்தின் கீர்த்தி என்ற கதாபாத்திரத்தில் வரவேற்பை பெற்றார்.

தற்போது இவர் 'பரதா' என்ற படத்தில் நடித்து வருகிறார். ஆனந்தா மீடியா பேனரில் விஜய் டான்கடா, ஸ்ரீனிவாசலு, ஸ்ரீதர் மகுவா ஆகியோர் இணைந்து இப்படத்தை தயாரிக்கின்றனர். பிரவீன் கந்த்ரேகுலா இந்தப் படத்தினை இயக்குகிறார். இந்தப் படத்தில் இசையமைப்பில் கோபி சுந்தரும், மிருதுல் சுஜித் சென் ஒளிப்பதிவாளராகவும் பணியாற்றியுள்ளனர். இப்படத்தின் டீசரில் இரண்டு பெண்களுடன் பயணிக்கும் கிராமத்தியப் பெண்ணின் சாகசப் பயணத்தோடு கதை நகர்வதுபோல் உள்ளது. கிராமங்களில் பெண்கள் பரதா அணிவது, அவர்களை அடிமைகளாக சித்திரிக்க ஆண்கள் கொண்டுவந்த வழக்கம் என்று கூறப்படுகிறது. பரதா படத்திலும் பரதா அணிவதை வழக்கமாகக் கொண்டிருக்கும் பெண்களின் நிலையை கதைக்கருவாகக் கொண்டு கதை நகர்கிறது. இந்நிலையில், இந்தப் படம் உலகம் முழுவதும் வரும் ஆகஸ்டு 22ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இப்படத்தின் பாடலும் வெளியாகியுள்ளது.

# முதல் ஒருநாள் போட்டி: இங்கிலாந்தை வீழ்த்தி இந்திய அணி வெற்றி



ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான இந்திய பெண்கள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட டி20 ஓவர் தொடரை இந்திய அணி 32 என்ற கணக்கில் வென்று வரலாறு படைத்தது.

அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெறுகிறது. இதன்படி இந்தியா இங்கிலாந்து இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி சவுத்தம்டனில் நேற்று நடைபெற்றது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 258 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக சோபியா டங்க்லி 83 ரன்களும், டேவிட்சன் ரிச்சர்ட்ஸ் 53 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் கிராந்தி கவுட் மற்றும் சினே ராணா தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 259 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இந்திய அணி இங்கிலாந்து பந்துவீச்சை எளிதில் சமாளித்து வெற்றியை நோக்கி பயணித்தது. 48.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த இந்திய அணி 262 ரன்கள் அடித்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியா தரப்பில் தீப்தி சர்மா 62 ரன்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 48 ரன்களும் அடித்து வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# டெஸ்ட் தரவரிசை: முதலிடம் பிடித்த ஜோ ரூட்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டது. பேட்ஸ்மேன்கள் தரவரிசையில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் (888 புள்ளி) மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார். ஜோ ரூட் இந்தியாவுக்கு எதிரான 3வது டெஸ்டில் சதம் (104 ரன்) அடித்ததன் மூலம் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளார்.. இதே டெஸ்டில் 11 மற்றும் 23 ரன் வீதம் எடுத்து சொதப்பிய புரூக் 862 புள்ளிகளுடன் 3வது இடத்துக்கு தள்ளப்பட்டார். நியூசிலாந்தின் கேன் வில்லியம்சன் (867 புள்ளி) 2வது இடத்துக்கு உயர்ந்துள்ளார்.

இந்திய வீரர்களான ஜெய்ஸ்வால் ஒரு இடம் சரிந்து 5வது இடத்திலும் (801 புள்ளி), ரிஷப் பண்ட் 8வது இடத்திலும் (ஒரு இடம் குறைவு), கேப்டன் சுப்மன் கில் 9வது இடத்திலும் (3 இடங்கள் பின்னடைவு) உள்ளனர். அதே சமயம் லார்ட்ஸ் டெஸ்டில் இரு இன்னிங்சிலும் அரைசதம் விளாசிய ரவீந்திர ஜடேஜா 5 இடங்கள் உயர்ந்து 34வது இடத்தையும், முதல் இன்னிங்சில் சதமடித்த லோகேஷ் ராகுல் 5 இடங்கள் அதிகரித்து 35வது இடத்தையும் பெற்றுள்ளனர்.

# சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த ரசல்

வெஸ்ட் இண்டீஸ் நட்சத்திர வீரர் ஆண்ட்ரே ரசல் , சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 37 வயதான ரசல், அடுத்து நடைபெற உள்ள ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் முதல் இரண்டு போட்டிகளுடன் , சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இதுவரை ஒரு டெஸ்ட், 56 ஒருநாள் போட்டிகள் மற்றும் 84 டி20 போட்டிகளில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக ரசல் விளையாடியுள்ளார். 84 டி20 போட்டிகளில் விளையாடியுள்ள ரசல் 1,078 ரன்கள் எடுத்துள்ளார். 61 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார், 56 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள ரசல் 1,034 ரன்கள் எடுத்து, 70 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். வெஸ்ட் இண்டீஸ் அணி 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் டி20 உலகக் கோப்பையை கைப்பற்ற ரசல் முக்கிய பங்கு வகித்தார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.